ரியல் செக்யூரிட்டி சர்வீஸ்
செல்: 99408 15569, 94424 10009

மீடியா செய்தி
MEDIA SEITHI தமிழ் நாளிதழ்
RNI NO : TN TAM/2016/73491 நன்னம்பிக்கையின் அடையாளம் mediaseithi@gmail.com

ரெயின்போ தலையணை

மலர் – 9 இதழ் – 114 சென்னை 29.01.2025 புதன்கிழமை ஆண்டு சந்தா 1800/– பக்கம் – 4 விலை ரூ. 5.00

# பெருமாள்பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி "கனவு மெய்ப்பட" மற்றும் அறிவியல் கண்காட்சி







பெரியபாளையம்.ஜன 29 திருவள்ளூர் மாவட்டம், பெருமாள்பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளை சார்பாக 12ம் வகுப்பு மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி"கனவு மெய்ப்பட"மற்றும் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது.

இதில்,ஆயிரத்திற்கும்மேற்பட்ட 12ம் வகுப்பு மாணவர்கள் பங்கேற்றனர்.இதில்,பங்கேற்ற மாணவர்கள் பயன்பெறும் வகையில் கல்வித்துறை வல்லுநர்களின் வழிகாட்டுதல் நிகழ்ச்சியும்,அறிவியல் உண்மைகளை உலகிற்கு விளக்கும் அறிவியல் கண்காட்சியும் சிறப்பாக நடைபெற்றது.இதனைத் தொடர்ந்து ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளையின் கீழ் இயங்கும் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியும்,ஸ்ரீராம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும்,ஸ்ரீராம் தொழில்நுட்பக் கல்லூரியும் இணைந்து மாணவர்களுக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சி மற்றும் அறிவியல் கண்காட்சியை நடத்தினர்.இதில்,சிறப்பு விருந்தினராக திருவள்ளூர் மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி பி.ரவிச்சந்திரன் கலந்துகொண்டார்.சிறப்பு அழைப்பாளர்களாக ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளையின் தலைவர் முனைவர். ஆர்.நாராயணசாமி,ஸ்ரீராம் அறக்கட்டளையின் அறங்காவலர் முனைவர் பி.கோவிந்தராஜுலு, ஏ.எம்.கோவிந்தராஜ்,எஸ்.பி.சவுத்ரி,ஏ.வி.குமரவேலன்,என்.பிரேம்குமார்,

பேங்க் ஆப் அமெரிக்காவின் துணைத்தலைவர்(டெக்னாலஜி மேனேஜர்) முனைவர் கார்த்திகேயன்ஜானகிராமன்,

மாவட்ட கல்வி அதிகாரி கே.ரவி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில்,கல்லூரி மாணவர்கள் தங்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில்

நீர் அலாரம்,கைத்தட்டல் ஸ்விட்ச்,ஹைட்ராலிக் லிஃப்ட் முப்பரிமான படிமம்,ரோபோ கார்,நீர் ராக்கெட்,மின்காந்த ரயில் என 100க்கும்மேற்பட்ட அரிய வகை புதிய படைப்புகளை காட்சிப்படுத்தினர்.சிறந்த படைப்பிற்கான பரிசையும், பாராட்டையும் மாணவர்கள் பெற்றனர்.முதன்மை கல்வி அதிகாரி பி.ரவிச்சந்திரன் பேசும்போது மாணவர்களின் கனவு மெய்ப்பட அவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய நெறிமுறைகளையும்,பொதுத் தேர்வை எழுத இருக்கும் மாணவர்களுக்கு தேர்வை எவ்வாறு? அணுகவேண்டும் என்ற முறையையும், உத்வேகத்துடன் அவர்கள் தேர்வினை சந்திக்கவேண்டும் என்றும் அறிவுரை வழங்கி ஊக்குவித்து பேசினார். மாவட்ட கல்வி அலுவலர் கே.ரவி பேசும்போது மாணவர்கள் தங்களின் கனவுகளை மெய்ப்பிக்க பாடுபட வேண்டும் என்று கூறினார்.சிறப்பு அழைப்பாளர் பேசும்போது

இக்கல்லூரியில் தான் கற்ற கல்வியியல் மற்றும் வாழ்வியல் அனுபவங்களை மாணவ மாணவியர்களிடம் பகிர்ந்துகொண்டார்.மேலும், மாணவர்கள் வாழ்வில் வெற்றி பெற வழிகாட்டு நெறிமுறைகளை எடுத்துக் கூறினார்.ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளையின் தலைவர் முனைவர் ஆர்.நாராயணசாமி பேசும்போது முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்களைப் போன்று மிகப்பெரிய விஞ்ஞானியாகவும், தன்னம்பிக்கையும்,விடா முயற்சியும் செய்து மாணவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்று கூறினார்.ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் முனைவர் கோவிந்தராஜுலு பேசும்போது மாணவர்கள் தங்கள் முன்னோடியாக தங்களுக்குப் பிடித்தவர்களின் நல்ல வழிகளை பின்பற்றி வாழ்க்கையில் உயர வேண்டும் என்று கூறி வாழ்த்தினார்.முன்னதாக அனைவரையும் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் பி.ஆர்.ரமேஷ்பாபு வரவேற்றார்.மேலும்,12ம் வகுப்பு மாணவர்கள் உயர்கல்வியில் எந்த? துறையை தேர்வு செய்ய வேண்டும் என்பதை விளக்கிக் கூறினார்.நிகழ்ச்சியின் முடிவில்,கணிப்பொறியியல் துறைபேராசிரியை பிரவீனா நன்றி கூறினார்.